அன்புள்ள நண்பர்களே, பெற்றோர்களே,

இந்த இனிய புத்தாண்டில் எனது அன்பான வாழ்த்துக்களைத் முதற்கண் தெரிவித்து கொள்கிறேன்.!

எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எனது விருப்பத்தின் காரணமாக, இந்த செய்திமடல் மூலம் உங்களுடன் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். குழந்தைகளுக்காக ஒரு கற்றல் மையத்தை அமைப்பது எனது கனவாக இருந்தது, அது வடிவம் பெற்று முன்னேறும் போது நான் ஊக்கமடைகிறேன்.

குழந்தைகள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உரிமைகள், கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரம் ஆகியவை ஒரு நாகரிக சமுதாயத்திற்கான அடிப்படை மாண்புகளாகும், அது எப்போதும் எல்லா வடிவங்களிலும் வெளிப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவும் தத்தம் கடமைகளையும் பொறுப்புகளையும் நியாயமான முறையில் புரிந்துகொண்டு, உணர்ந்து, நடைமுறைப்படுத்துகிறதா என்ற கேள்வி எழுகிறது.

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகள் தங்கள் வீடு, பள்ளி மற்றும் பொது இடத்தில் கிடைக்கவேண்டிய நேர்மையான உரிமைகள் சரியான முறையில் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நியாயமானது. ஆனால், உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பது எவரும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும், தங்கள் விருப்பப்படி எதையும் செய்யலாம் என்று அர்த்தமல்ல. குழந்தைகள், குறிப்பாக பதின்பருவத்தில் உள்ளவர்கள், தங்கள் உரிமைகளை அறிந்து கொள்வதற்கு முன்பு, தங்கள் வயதிற்கேற்ற நேர்மையான கடமைகளையும் பொறுப்புகளையும் சரியாக கற்றுக் கொள்ள வேண்டும்.

சரியாக புரிந்து கொள்ளாத உரிமைகள் மூலம் தவறான வழிகாட்டுதல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சுய ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்வதும் , பயிற்சி செய்வதும், பயன்படுத்துவதும் ஒருவருக்கு உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை சரியாக வெளிப்படுத்த உதவுகிறது.
ஆதலால் ஒவ்வொரு பெற்றோரும் தம் குழந்தைகளுக்கு முதற்கண் அவர்கள்

ஆற்றவேண்டிய அடிப்படை பணிகளை சரியான, தெளிவான முறையில் புரிய வைப்பது மிகவும் அவசியமாகும்.

சுயத்தைப் பற்றிய நனவு வலிமை பெறும்போது, சமுதாயத்தை நோக்கிய நனவு வளமும் வலுவும் பெறும். குழந்தைகள் தமது சுய ஒழுக்கத்தை நன்கு உணர்ந்து செயல்படும்போது, அவர்கள் தமது மற்றும் பிற உயிர்களின் உரிமைகளை மதிக்கக் கற்றுக் கொள்ளும்போது, அவர்கள் தங்களை கண்ணியமாக வழிநடத்தும்போது, அவர்களின் வாழ்க்கை அழகாகவும் அமைதியாகவும் இருக்கும் என்று நான் உறுதி கூற விரும்புகிறேன்.

இந்த இனிதான சந்தர்ப்பத்தில், உங்கள் குழந்தைகள் உங்களுக்கும், உங்கள் வீடுகளுக்கும், பள்ளிகளுக்கும், அவர்கள் வாழும் சமூகத்திற்கும் ஒரு சிறந்த வரமாக அமையட்டும் என்று வாழ்த்துகிறேன்!

மீண்டும் சந்திப்போம்!

அன்புடனும் மரியாதையுடனும்,
துரை. மணிகண்டன்